களுக்கு மாத்திரம் 2 ஸ்தானங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ரிசர்வ் சீட் என்பதே இல்லாமல் ஜெனரல் சீட்டாக 34 வார்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிட்டியில் நான் எவ்வளவோ எதிர்த்தும், ரிசர்வ் சீட் கொடுத்தாக வேண்டும் என்று சொன்னதற்கு, அப்படி ஒன்றும் நகரசபையைப் பொறுத்தவரையில் அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று மெஜாரிடியினர் சொல்லிவிட்டார்கள், ஹரிஜனங்கள் மெஜாரிடியாக இருக்கக் கூடிய இடத்தையே அவர்களுக்குக் கொடுத்துவிடலாம், அந்த இடத்திலிருந்து ஜெனரல் சீட்டிலேயே வரட்டும் என்று சொல்லிவிட்டார்கள். ஜாதி இந்துக்கள் இருக்கும் இடத்தில் கூட அவர்கள் வந்துவிடமுடியும், அவர்களுக்காக தனி இடம் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்த விதமாக வேலூர் முனிசிபாலிடி சம்பந்தப் பட்டவரையில் இப்பொழுது ஏறக்குறைய 15 வார்டுகளுக்குமேல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை யெல்லாம் பார்த்தால், உண்மையிலேயே ஒரு கட்சியார் தங்களால் முடிந்த வரையில் ஸ்தானங்களைக் கைப்பற்றித் திரவேண்டும் என்ற ஒரு காரணத்திற்காகத்தான் இம்மாதிரி செய்து கொண்டு வருகிறதே தவிர, உண்மையிலேயே ஒரு நகரத்தை நல்லபடி நடத்த வேண்டும் என்ற காரணத்திற்காக இல்லை என்று நன்றாகப் புலப் படுவதால், இப்பொழுதிருக்கும் முனிசிபல் கவுன்சில்களை நவம்பர் முதல் தேதியிலிருந்தே எடுத்துவிட்டு, புதுக் கவுன்சில்கள் ஏற்படுத்தும் வரைக்கும் அவைகளைக் கமிஷனர்களே நிர்வகித்து வரலாம் என்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கின்றேன்.

(Mr. Speaker in the Chair.)

IV.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* THE BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER: I want to make two announcements to the House. The Business Advisory Committee which just met today has decided that the Panchayats Bill which was scheduled to be taken up on the 23rd instant may be taken up on the 22nd.

பஞ்சாயத்து மசோதாவை 23-ந் தேதி எடுத்துக்கொண்டு விவாதிக்க வேண்டும் என்று முதலில் தீர்மானித்திருந்தோம். ஆனால், 23-ந் தேதி எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, 22-ந் தேதியே அதை எடுத்துக்கொள்ள லாம் என்று அலுவல் ஆலோசனைக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

சென்னை வெயிட்ஸ் அண்ட் மெஷர்ஸ் என்போர்ஸ்மெண்ட் மசோதா வையும் சென்னை பப்ளிக் ஹெல்த் மசோதாவையும் 22-ந் தேதியன்று எடுத்துக் கொள்வதாக இருந்தோம். அவைகளை 27-ந் தேதியன்று எடுத் துக் கொள்ளலாம் என்று இப்பொழுது தீர்மானித்திருக்கிறோம்.

இப்பொழுது சபை முன் இருக்கும் சென்னை ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் மசோதாவின் மீது பொது விவாதம் முடிந்த பிறகு, ஷரத்து வாரி விவாதத்தையும் நடத்தி, மசோதாவை நிறைவேற்றிவிட்டு, சென்னை நகர முனிசிபல் (திருத்த) மசோதாவையும் எடுத்துக்கொண்டு, பொது விவாதத்தை இன்றைக்கு முடித்து விடுவோம். இதன் மீது ஷரத்துவாரி விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

நாளைக்கு, உணவு விவாதம் மூன்று மணி நேரம் நடந்தால் போதும் என்று எல்லோரும் சொன்னார்கள். மூன்று மணி நேர உணவு விவா தத்திற்குப் பிறகு, சென்னை நகர முனிசிபல் (திருத்த) மசோதாவின் மீது ஷரத்துவாரி விவாதம் நடக்கும். தேவையானால் பிற்பகலிலும் மூன்று மணியிலிருந்து 5 மணி வரைக்கும் உட்கார்ந்து ஷரத்துவாரி விவாதத்தை முடித்துவிட வேண்டுமென்றும் அலுவல் ஆலோசனைக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

9th September 1958] [Mr. Speaker]

பஞ்சாயத்து மசோதாவை 23-ந்தேதி எடுத்துக்கொள்வதாக இருந்தால் 20-ந் தேதிவரை திருத்தம் கொடுக்கலாம் என்று சொல்லியிருந் தேன். 22-ந் தேதியே அம்மசோதாவை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று இன்று முடிவு செய்திருப்பதால், 19-ந்தேதி பிற்பகல் நான்கு மணிக்குள்ளாக இதற்கான திருத்தங்களை கனம் அங்கத்தினர்கள் கொடுத்துவிடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

III.—GOVERNMENT BILLS—*cont.*

THE MADRAS DISTRICT MUNICIPALITIES (AMENDMENT) BILL, 1958—*cont.*

* **Sri A. GOVINDASAMY** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, முனிஸிபாலிட்டி தேர்தலை நடத்துவதற்கு ஆறு மாத காலம் தள்ளிப் போட வேண்டுமென்ற அவசியம் இல்லையென்ற கருத்தை நானும் வலி யுறுத்த விரும்புகிறேன். பஞ்சாயத்து தேர்தலை நடத்த வேண்டியிருப்ப தால், முனிஸிபல் தேர்தலைத் தள்ளிப்போட வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துகிறவர்கள் வேறு, முனிஸி பாலிட்டி தேர்தலை நடத்துகிறவர்கள் வேறு. ஒன்றுக்கு ஒன்று தள்ளிப் போடவேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தேர்தலை, பஞ்சாயத்து ஆபீசர்களும், ஜில்லா போர்டுகளில் உள்ள குமாஸ்தாக்களும் நடத்துகிறார்கள். முனிசி பல் தேர்தலை முனிசிபல் கமிஷனரும், அங்குள்ள குமாஸ்தாக்களும் நடத்துவதால் ஒன்றுக்கொன்று என்ன இடையூறு ஏற்படும் என்று கேட்கிறேன். ஆகையால் பஞ்சாயத்துத் தேர்தல், முனிஸிபல் தேர்தலுக்கு இடையூறாக இருப்பதாகச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள் கிறேன். இந்தக் காரணத்திற்காக இப்போது ஆறு மாத காலம் ஒத்தி வைப்பதாகச் சொன்னால் இந்த ஆறு மாதங்களுக்குள் பஞ்சாயத்து தேர்தல் எல்லா இடங்களிலும் முடிந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஆகவே அப்புறம் நடக்கவில்லை யென்று சொல்லி மேலும் தள்ளிப் போடுவார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் எல்லா இடங்களிலும் 1959 ஜனவரி 31-ந் தேதிக்குள் முனிஸிபல் தேர்தல் நடந்து முடிந்துவிட்டால் நல்லது என்று கருதுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

மேலும் வோட்டர் லிஸ்டைத் திருத்த வேண்டுமென்ற கருத்தை நண்பர் விநாயகம் அவர்கள் வலியுறுத்தினார். வோட்டர் லிஸ்டில் அதிகத் தவறு இருக்கிறது என்பது உண்மை. உயிரோடு இருக்கிறவர்களை இறந்தவர் களுடைய ஜாப்தாவில் சேர்த்திருப்பதும், இறந்தவர்களை உயிரோடு இருப் பவர்களோடு சேர்த்திருப்பதும் போன்று அதில் தவறுகள் அதிகம் இருக்கின்றன. குறிப்பாக ஸ்ரீ கே. அன்பழகன் அவர்களுடைய பெயர் இறந்தவர்களுடைய ஜாப்தாவில் சேர்க்கப்பட்டு அதன் காரணமாக பல சிக்கல் எழுந்தது. ஹைக் கோர்ட் வரையிலும் சென்று உத்தரவு வாங்கி வந்த பிறகுதான் நாமினேஷன் அவர் பைல் பண்ணும்படியான சங்கடம் உண்டாயிற்று. ஆகையால் உடனடியாக வோட்டர் லிஸ்டைத் திருத்த வேண்டும். அதோடு வோட்டர் லிஸ்டைத் திருத்த வேண்டுமென்ற கார ணத்தைக் காட்டி மேலும் தேர்தலை ஒத்தி வைத்துக்கொண்டு போகாமல் மூன்று மாதத்திற்குள்ளாக அந்தக் காரியத்தை கனம் அமைச்சர் அவர்கள் முடித்துத் தர வேண்டும். அதோடு வோட்டர் லிஸ்டைத் தயாரிக்கிறவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் அதிக மனச் சங்கடத்தோடு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு அதிகப்படி ஸ்பெஷல் அலவன்சு கொடுத்து இவ் வேலையில் அவர்கள் உற்சாகத்துடன் பிழை எதுவும் வராமல் வேலை செய்யும்படி யாகவும் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆகையால் எந்தக் காரணத்தை கொண்டும் தேர்தலை ஒத்திப்போடாமல் 1959-ம் வருஷம் ஜனவரி மாதம 31-ந் தேதிக்குள் தேர்தலை நடத்தித் தர வேண்டுமென்ற உத்தரவாதத்தை கனம் அமைச்சர் அவர்களிடம் நான் எதிர்பார்த்து இதை வலியுறுத்திக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.